# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,851 — 1931 ம் ௵ சித்திரை௴ 30 ந் திகதி, வியாழக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவகமுவ ஆண்பாடசாலை பெருப்பித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 20,192. குறிச்சி—நாவகாமுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கெண்டலந்த .. | தோட்டம், 37 தென்னையும், 4 பலாவும், 1 மாவும், 2 தோடையும், 2 எலுமிச்சையும், 5 கமுகுவும், ஓட்டுக்கூரையுள்ள பாடசாலைக் கட்டிடமும், கட்டிடச் சுவரும், ஓலையால் வேய்ந்த பள்ளிக்கூடக் கட்டிடமும், மண் சுவரும், ஒரு தகரக் கற்கக்கூசுமுள்ளது | விதான ஆராச்சிகே டோரு அல்பேற்றினு குணசேகர, சென திராகே தானியல் திலிக்கேவாதன, சென திராகே தொன் டேவிட் திலிக்கேவாதன, சென திராகே தொன் சுவாறிஸ் திலிகேவாதன | 0 3 2·8 |
| 2 | ஷை .. | வெறுங்காணி .. .. | ஷை .. | 0 0 1·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஎப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ ஆனி௴ 12 ந் தேதியிலன்று 11 மணிக்குக் இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ம் ௵ சித்திரை௴ 23 ந் உ.

ஈ. டபிள்யு. கன்னங்கற,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தியபோட்டவில் புதுப் பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 4,108. குறிச்சி—தியபொட்ட—கொலன்னகோறளை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தேல்லேகளகாவாவத்த .. | தோட்டம் .. | டபிள்யு. முதலிஅப்புகாமியும் மறுபேரும் .. | 2 0 7·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ—த் துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதிவவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹூ வைகாசி மாசம் 26ந் தேதியிலன்று பிற்பகல் 3 மணிக்கு கொலனகமான் வங்களாவில் என்முன்பாக வெளிப் பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித் துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ம் ஹூ சித்திரைமீ 27 ந் உ.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## காணி அளவைப்பற்றிய அறிவித்தல்.

ஊவா மாகாணத்தில் காணி அளவைக் கேள்விப் பத்திரங்கள் நிற்பாட்டல்.

இத்தால அறிவிப்பது யாதெனில் ஊவா மாகாணத்தில் முடிக்குரிய காணி வத்தைக்கு அல்லது விலைக்குத் தரும்படி கேட்கும் கேள்விப்பத்திரங்களின் அளவைகள் சுழற்சியாய் தைபிடப்படும்.

2. மாகாணம் பின்வருமாறு பிரிக்கப்பட்ருக்கிறது:—

முதற் பிரிவு.—வெல்லவாய்ப் பிரிவிலுள்ள கநதப் பொல்ல கோறளையையும், வியலுவ, யற்றிக்கிந்த, உடுக்கிந்தப் பிரிவுகளையும் அடங்கியது.

இரண்டாம் பிரிவு.—வெல்லவாய்ப் பிரிவிலுள்ள கொங்கல்ல. பிந்தன, சித்தரம்பலாத்த கோறளைகளையும் பிந்தனை வெல்லாச, புத்தள பிரிவுகளையும் அடங்கியது.

3. மேற்காட்டிய இரண்டாம் பிரிவைச்சேர்ந்த கேள்விப் பத்திரங்கள் 1931 ம் ஆண்டு ஆடி மாசம் 1 ந் தேதிக்குப்பின் ஏற்கப்படமாட்டா. அந்தத் தேதிக்குப்பின் இப்பிரிவுக்குள் அளவைக் குறித்த கேள்விப்பத்திரங்கள் உலாந்த மேஸ்தர் தலைவருக்கு அனுப்பப்படமாட்டாது. ஆகிலும் கேள்விக்காரர்கள அப்பிரிவிலுள்ள நிலத்தை வத்தைக்கு அல்லது விலைக்குக் கொடுப்பதற்குத் தடைகளிருக்கின்றனவோ என்று அறியும் நோக்கமாய்த் தங்களுடைய கேள்விப் பத்திரங்களைப் பதிவுசெய்யும்படி கேட்பதற்கு இது தடையாயிராது.

4. இதன்பின் முதலாம் பிரிவு அளவைக்காக கூடப் படும். இப்பிரிவிலுள்ள முடிக்குரிய நிலத்தை விலைக்கு அல்லது வத்தைக்குத் தரும்படி கேட்கும் கேள்விப்பத்திரங்கள் கூடியளவு நேரத்தோடே எனக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஈ. டீ. மிலிங்றன்;
ஊவாமாகாண அரசாட்சி ஏஜன்று.

வதுளைக் கச்சேரி.
1931 ம் ஹூ சித்திரைமீ 20 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.